**செப்டம்பர் – 20**

# TNPSC துளிகள்

- சீனாவின் பெய்டைஹேயில் நடைபெற்ற ஸ்பீட் ஸ்கேட்டிங் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் ஆனந்த்குமார் வேல்குமார் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்றார்.
- ஹாங்சோவில் நடைபெற்ற மகளிர் ஹாக்கி ஆசிய கோப்பை 2025 இறுதிப் போட்டியில் சீன அணி இந்திய அணியினை 4–1 என்ற கணக்கில் தோற்கடித்து அதன் மூன்றாவது பட்டத்தை வென்றது.
- சர்வேஷ் குஷாரே உலக சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வரலாற்று ரீதியாக ஆறாவது இடத்தைப் பிடித்து அந்தப் போட்டியை எட்டிய முதல் இந்திய உயரம் தாண்டுதல் வீரரானார்.
- இந்தியக் கடற்படையின் INS நிஸ்டார் எனும் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ஆழ்கடலுக்கான ஆய்வு உதவிகரக் கப்பலானது சிங்கப்பூரில் நடைபெறும் பசிபிக் ரீச் 2025 எனும் பன்னாட்டுப் பயிற்சியில் பங்கேற்கிறது.
  - இது ஆழ்கடல் மீட்பு வாகனங்களுக்கான முதன்மை கப்பலாகச் செயல்படுகிறது என்பதோடு மேலும் பன்னாட்டு நீர்மூழ்கிக் கப்பல் மீட்புப் பயிற்சிகள் மற்றும் நிபுணத்துவப் பரிமாற்றங்களில் பங்கேற்கும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் புதிய தொழிற்பேட்டைகள்




- முதலமைச்சர் தமிழ்நாட்டில் மொத்தம் 67 கோடி ரூபாய் செலவில் நான்கு தொழிற் பேட்டைகளை காணொளி வாயிலாகத் திறந்து வைத்தார்.
- காவேரிராஜபுரம் (திருவள்ளூர்), முத்தூர் (திருநெல்வேலி), கடம்பாடி (செங்கல்பட்டு), கொருக்கை (திருவாரூர்) ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப் பட்டு உள்ளன.
- கடலூர் (மருதாடு) மற்றும் கோயம்புத்தூர் (கிட்டம்பாளையம்) ஆகிய இரண்டு தனியார் தொழிற்பேட்டைகளையும் திரு.ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருமுடிவாக்கத்தில் ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் காணொளி வாயிலாகத் திறக்கப்பட்டது.

- நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் உணவுப் பதப்படுத்துதல் தொகுதியில் ஒரு பொது மையம் திறக்கப்பட்டது.

## தமிழ்நாடு கிராமப்புற அமைப்புகளுக்கு மானியங்கள்




- 2025–26 ஆம் நிதியாண்டிற்கான ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத்தின் முதல் தவணையாக தமிழகத்திற்கு 127.586 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கி உள்ளது.
- இந்தத் தொகையானது, பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குப் பதினைந்தாவது நிதி ஆணைய மானியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியாகும்.
- மானியங்கள் தமிழ்நாட்டில் தகுதியான 2,901 கிராமப் பஞ்சாயத்துகள், தகுதியான 74 தொகுதி பஞ்சாயத்துகள் மற்றும் தகுதியான ஒன்பது மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்பட்டது.
- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் மற்றும் ஜல் சக்தி அமைச்சகம் ஆனது நிதி அமைச்சகத்திடம் மானியங்கள் குறித்த பரிந்துரைகளை வழங்குகின்றன.
- இந்த மானியங்கள் நிதி அமைச்சகத்தால் ஒரு நிதியாண்டில் இரண்டு தவணைகளாக வெளியிடப்படுகின்றன.
- ஒருங்கிணைக்கப்பட்ட மானியங்கள் ஆனது அரசியலமைப்பின் பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ள 29 பிரிவுகளின் கீழ் இடம் சார்ந்தத் தேவைகளுக்காக கட்டமைக்கப்படுகின்றன.
- இந்த மானியங்களைச் சம்பளம் அல்லது பிற நிறுவன தொடர்பான செலவுகளுக்குப் பயன்படுத்த முடியாது.

# தேசியச் செய்திகள்

## பாதுகாப்புத் துறையின் கொள்முதல் குறித்த கையேடு 2025

- பாதுகாப்புத் துறை அமைச்சர், 2009 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கடைசி பதிப்பைப் புதுப்பிக்கும் வகையிலான 2025 ஆம் ஆண்டு பாதுகாப்புத் துறையின் கொள்முதல் குறித்த கையேட்டினை (DPM) அங்கீகரித்துள்ளார்.


- இந்தப் புதிய கையேடு ஆனது நடப்பு நிதியாண்டில் சுமார் 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள வருவாய் கொள்முதலை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது செயல்பாட்டு மூலதன சிக்கல்களைத் தளர்த்துதல், அபராதங்களுக்கு 5-10% வரை வரம்பு நிர்ணயித்தல் மற்றும் மேம்பாட்டின் போது அறுதியிடப்பட்ட சேதங்களைத் தள்ளுபடி செய்தல் போன்ற தொழில்துறைக்கு உகந்த நடவடிக்கைகளை அறிமுகப் படுத்துகிறது.
- இது உள்நாட்டுமயமாக்கல், புதுமை மற்றும் தனியார் தொழில்துறை, பாதுகாப்பு துறை சார் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் போன்ற முதன்மை நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு மூலம் தற்சார்பினை ஊக்குவிக்கிறது.





## சுவஸ்த் நாரி சஷக்த் பரிவார் அபியான் முன்னெடுப்பு

- சுவஸ்த் நாரி சஷக்த் பரிவார் அபியான் இயக்கமானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- இந்த இயக்கமானது, காந்தி ஜெயந்தியுடன் ஒருங்கே சேர்ந்து, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதி வரை நடைபெறும்.
- ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் மற்றும் சமூக சுகாதார மையங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதார முகாம்களை ஏற்பாடு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இரத்த சோகை, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய், காசநோய் மற்றும் அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய்க்கான பரிசோதனைகளை வழங்குகிறது.
- மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனைகள், நோய்த்தடுப்பு மருந்து வழங்குதல் மற்றும் MCP அட்டைகளின் விநியோகம் மூலம் தாய் மற்றும் குழந்தை நல பராமரிப்பு ஆதரிக்கப்படுகிறது.
- வெளிப்படைத்தன்மைக்காக SASHAKT வலை தளம் மூலம் நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் தரவு அறிக்கையிடல் மேற்கொள்ளப்படும்.
- இந்த முன்னெடுப்பானது தாய் மற்றும் குழந்தைகளின் உயிரிழப்பைக்

குறைப்பதையும், வசதி குறைந்த பகுதிகளில் சுகாதார அணுகலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## தேசியப் புவிவெப்ப ஆற்றல் கொள்கை 2025




- இந்திய அரசானது, 2025 ஆம் ஆண்டில் புவி வெப்ப ஆற்றல் குறித்த தனது முதல் தேசிய கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆனது புவிவெப்ப ஆற்றல் மேம்பாட்டினை ஒழுங்குபடுத்தி மேற்பார்வையிடும்.

- இந்தக் கொள்கையானது ஆராய்ச்சி, அமைச்சகங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இமயமலை, கேம்பே படுகை, ஆரவல்லி, மகாநதிப் படுகை மற்றும் கோதாவரி நதிப் படுகை உள்ளிட்ட பத்து புவிவெப்ப ஆற்றல் மிக்க பகுதிகள் அடையாளம் காணப் பட்டு உள்ளன.
- இந்தியாவின் மதிப்பிடப்பட்ட புவி வெப்ப ஆற்றல் திறன் சுமார் 10 ஜிகாவாட் ஆகும்.
- இந்தக் கொள்கையானது கலப்பின புவி வெப்ப-சூரிய மின் நிலையங்கள் மற்றும் பயன்படுத்தப் படாமல் விடப்பட்ட எண்ணெய் மற்றும் எரிவாயுக் கிணறுகளை மறு சீரமைப்பதை ஊக்குவிக்கிறது.

## PMS ஒப்பந்தத்தில் இந்தியா-ISA




- கார்ல்ஸ்பெர்க் ரிட்ஜில் (முகட்டில்) பல் கனிம சல்பைடுகளை (PMS) ஆராய்வதற்காக சர்வதேச கடல்படுக்கை ஆணையத்துடன் (ISA) இந்தியா 15 ஆண்டு கால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது ISA உடனான இந்தியாவின் மூன்றாவது ஆய்வு ஒப்பந்தமாகும் என்பதோடு மேலும் PMS ஆய்விற்கான இரண்டாவது ஒப்பந்தமாகும்.
- அரேபியக் கடலில் அமைந்துள்ள கார்ல்ஸ்பெர்க் முகடு 3,00,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இது இந்திய மற்றும் அரேபிய கண்டத் தட்டுகளுக்கு இடையில் ஒரு கண்டத் தட்டு (டெக்டோனிக்) எல்லையை உருவாக்குகிறது மற்றும் ஓவன் பிளவு மண்டலம் வரையில் நீண்டுள்ளது.
- கார்ல்ஸ்பெர்க் முகட்டில் PMS ஆய்வுக்காக வழங்கப்பட்ட முதல் உலகளாவிய உரிமம் இதுவாகும்.
- PMS என்பது நீர்வெப்ப நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட செம்பு, துத்தநாகம், தங்கம் மற்றும் வெள்ளி நிறைந்த கடல் தள கனிம இருப்புகளாகும்.

## வாக்காளர் அங்கீகாரத்திற்கு ஆதார்

- 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 23(4)வது பிரிவின் கீழ் ஆதார் என்பது வாக்காளர் பட்டியலை நிர்வகிக்கும் சட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

- சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வரம்பு வரையில் வாக்காளர்கள் ஆதாரை அடையாளச் சான்றாகப் பயன்படுத்தலாம் என்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.
- பீகாரின் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் (SIR) சேர்ப்பதற்கு அல்லது ஆட்சேபனைக்கு செல்லுபடியாகும் 12வது ஆவணமாக ஆதார் அறிவிக்கப்பட்டது.
- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது இதன் மூலம் குடிமக்களுக்கும் ஊடுருவிய மக்களுக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்க்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் பதிலளித்தது.




## 2025–26 ஆம் பயிர் ஆண்டிற்கான ஓபியம் உரிமக் கொள்கை




- 2025–26 ஆம் ஆண்டில் ஓபியம் பாப்பி சாகுபடிக்கான வருடாந்திர உரிமக் கொள்கையானது மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது.
- சுமார் 1.21 லட்சம் விவசாயிகள் இந்த உரிமத்தினைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர் என்பதோடு இது இந்த ஆண்டு 15,000 புதிய விவசாயிகள் சேர்க்கப்பட்டதன் மூலம் 23.5% அதிகரிப்பைக் குறிக்கிறது.
- மார்பின் மகசூல் (MQY-M) ≥ 4.2 கிலோ/ஹெக்டேர் கொண்ட விவசாயிகள் ஓபியம் பிசின் சாகுபடி உரிமங்களைத் தக்க வைத்துக் கொள்ளலாம்.
- 3.0 முதல் 4.2 கிலோ/ஹெக்டேர் வரையிலான MQY-M உள்ளவர்கள் ஐந்து ஆண்டு உரிமத்துடன் பாப்பி தண்டு (CPS) உற்பத்தி முறைக்கு மாறலாம்.
- 2024–25 ஆம் ஆண்டில் 800 கிலோ/ஹெக்டேர் என்ற அளவிற்குக் குறைவான மகசூல் கொண்ட CPS விவசாயிகளின் உரிமங்கள் இடைநிறுத்தப்படும்.
- 1995–96 ஆம் ஆண்டு முதல் டிஜிட்டல் செய்யப்பட்ட பதிவுகள் ஆனது உரிமத்தில்

விளிம்புநிலை விவசாயிகளை பெருமளவில் சேர்க்க உதவியுள்ளன.

❖ இந்தக் கொள்கையானது, ஆல்கலாய்டு விநியோகத்தைப் பாதுகாப்பது, தற்சார்பினை அதிகரிப்பது மற்றும் "Make for World" என்ற தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் இந்திய மருந்தகத்தை ஆதரிப்பது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## மீன்வள மானியங்கள் மீதான WTO ஒப்பந்தம்



**Fishing for More**

**WTO members' annual fish subsidy**

| | |
|---|---|
| India | $274 million |
| China | $7.2 billion |
| EU | $3.8 billion |
| US | $3.4 billion |
| Korea | $3.1 billion |
| Japan | $2.8 billion |

❖ மீன்வள மானியங்கள் மீதான WTO (உலக வர்த்தக அமைப்பு) ஒப்பந்தம் என்பது சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மையமாகக் கொண்ட முதல் WTO ஒப்பந்தமாகும் என்பதோடு இது தீங்கு விளைவிக்கும் மீன்பிடி மானியங்களை இலக்காகக் கொண்டு உள்ளது.

❖ பிரேசில், கென்யா, வியட்நாம் மற்றும் டோங்கா உள்ளிட்ட WTO உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் இந்த ஒப்பந்தத்தினை அங்கீகரித்ததையடுத்து இது நடைமுறைக்கு வந்தது.

❖ இந்த ஒப்பந்தமானது சட்ட விரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப் படாத (IUU) மீன்பிடித்தல் மற்றும் அதிகப்படியான மீன்பிடித்தல் அல்லது ஒழுங்கு படுத்தப் படாத ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கான மானியங்களை தடை செய்கிறது.


❖ இது அதிகப்படியான மீன்பிடித்தலைத் தடுப்பது, நியாயமான வர்த்தகத்தை ஊக்குவித்தல் மற்றும் மீன்வளத்தை நம்பியுள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ உலகளாவிய மீன்வளங்களில் 35 சதவீதத்திற்கும் அதிகமானவற்றுள் தற்போது அதிகப் படியான மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பதால் கடல் வளப் பாதுகாப்பிற்கு இந்த ஒப்பந்தத்தை இது முக்கியமானதாக ஆக்குகிறது.

❖ இந்த ஒப்பந்தம் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற WTO அமைப்பின் 12வது அமைச்சர்கள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ இதனை முழுமையாக செயல்படுத்த 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நடைபெற உள்ள 14வது அமைச்சர்கள் மாநாட்டிற்கு முன்னதாக இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்க WTO உறுப்பினர் நாடுகளுக்கு வலியுறுத்தப்படுகின்றது.

## இந்தியா - மொரீஷியஸ் ஒப்பந்தம்





- இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு முக்கிய அமெரிக்க-ஐக்கியப் பேரரசு இராணுவத் தளமான டியாகோ கார்சியா அருகே ஒரு செயற்கைக்கோள் கண்காணிப்பு நிலையத்தை நிறுவ இந்தியாவும் மொரீஷியஸும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.
- மொரீஷியஸ் பிரதமர் நவின் சந்திர ராம்கூலம் அவர்களின் இந்திய வருகையின் போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இது இந்தியாவின் செயற்கைக் கோள் தரவு கண்காணிப்புத் திறன்களை மேம்படுத்தும்.
- டியாகோ கார்சியா தளம் உட்பட சாகோஸ் தீவுகள் மீது மொரீஷியஸின் இறையாண்மையையும் இந்தியா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.
- கடல்சார் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பில் கவனம் செலுத்தும் வகையில் மொரீஷியஸுக்கு 680 மில்லியன் டாலர் மதிப்பிலான மேம்பாட்டுத் தொகுப்பு நிதி அறிவிக்கப்பட்டுள்ளது.
- மொரீஷியஸின் கடலோரக் காவல்படைக்கான கூட்டு நீரியல்சார் ஆய்வுகள் மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட மேம்பட்ட கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புடன் இரு நாடுகளும் தங்கள் உறவுகளை வலுப்படுத்தியுள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இருதய மருந்து வைமடா

- காப்புரிமைச் சட்டத்தின் 3(d) பிரிவின் கீழ், நோவார்டிஸ் நிறுவனத்தின் இருதய மருந்து வைமடாவிற்கான காப்புரிமையை இந்தியா ரத்து செய்துள்ளது.
- புதுமை, கண்டுபிடிப்பு நடவடிக்கை மற்றும் சிகிச்சை செயல்திறன் இல்லாததால் இந்த முடிவு எடுக்கப் பட்டது.
- என்ட்ரெஸ்டோ (சகுபிடிரில் + வால்சார்டன்) என உலகளவில் விற்கப்பட்ட வைமடா,

கடந்த ஆண்டு உலகளாவிய விற்பனையில் 7.8 பில்லியன் டாலர் மதிப்பிலான விற்பனையைப் பதிவு செய்தது.




**Drugmaker May Challenge Ruling**

- Industry body Indian Pharmaceutical Alliance made a rare move to oppose the patent granted to Novartis
- It cited violation of Section 3(d) of the Indian Patent Act. This provision, under which Novartis also lost patent on its blockbuster cancer drug Glivec in 2013, is aimed at preventing evergreening
- No experimental data, comparative studies or technical rationale have been provided to substantiate any enhanced efficacy, says D Usha Rao, deputy controller of patents and designs
- Novartis may challenge the ruling by the patent office

## சுற்றுச்சூழல் செய்திகள்

### சாண்டர்ஸ் ஆலா




- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று அடையாறு கழிமுகத்தில் சாண்டர்ஸ் ஆலா தென்பட்டது.
- சென்னையில் சாண்டர்ஸ் ஆலா தென்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்த இனமானது கருப்பு நிற இறகுடைய ஆலா என்றும் அழைக்கப்படுகிறது என்ற நிலையில் இது பொதுவாக வடமேற்கு இந்தியப் பெருங்கடல் பகுதிகளுடன் தொடர்பு உடையது.

- ஸ்டெர்னுலா சாண்டர்சி ஒரு சிறிய, தரையில் கூடு கட்டும் கடல் பறவை இனமாகும்.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் இதன் வளங்காப்பு அந்தஸ்து மிகவும் அருகி வரும் இனமாகும்.
- அடையார் கழிமுகம், அடையாறு நதி வங்காள விரிகுடாவைச் சந்திக்கும் இடத்தில் அடையார் நதியால் உருவாகிறது.

## கர்ரா நம்பஷியென்சிஸ்




- மணிப்பூரின் கம்ஜோங் மாவட்டத்தில் உள்ள டாரெட்லோக் ஆற்றில் கர்ரா நம்பஷியென்சிஸ் என்ற புதிய நன்னீர் மீன் இனம் கண்டுபிடிக்கப் பட்டது.
- 9 முதல் 14 செ.மீ அளவுள்ள கர்ரா நம்பஷியென்சிஸ் மீன் இனமானது உள்ளூரில் அனல் பழங்குடியினரின் பேச்சுவழக்கில் நுடுங்குனு என அழைக்கப்படுகிறது.
- இது 'புரோபோசிஸ் இனங்கள் குழுவை' சேர்ந்தது.


# மாநிலச் செய்திகள்

## மன்கி-முண்டா அமைப்பு

- மன்கி-முண்டா அமைப்பு என்பது ஜார்க்கண்டின் கோல்ஹான் பகுதியில் உள்ள ஹோ பழங்குடியினரின் பாரம்பரிய சுயாட்சி மாதிரியாகும்.
- இது முண்டாக்கள் எனப்படும் கிராமத் தலைவர்களாலும், மன்கிகள் எனப்படும் தொகுதித் தலைவர்களாலும் வழிநடத்தப்படுகிறது.
- இந்த அமைப்பு ஆனது பிரச்சினைகளைத் தீர்த்து, வழக்கமானச் சட்டங்கள் மூலம் ஒழுங்கு முறையைப் பேணுகிறது.
- இது நில வரி அல்லது வெளிப்புறக் கட்டுப்பாடு இல்லாமல் பிரிட்டிஷ் ஆட்சிக்கு

முன்பே தோன்றியது.

- 1833 ஆம் ஆண்டில், கேப்டன் வில்கின்சன் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் 31 விதிகளாக அமைத்தார்.
- முண்டாக்கள் மற்றும் மன்கிகள் பிரிட்டிஷ் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு இடையே இடைத்தரகர்களாக செயல்பட்டனர்.
- ஒரு முண்டா ஒரு கிராமத்திற்குத் தலைமை தாங்குகிறார் அதே நேரத்தில் ஒரு மங்கி 8 முதல் 15 கிராமங்களை (பித்) மேற்பார்வையிடுகிறார்.
- தலைமைப் பதவிகள் என்பவை பரம்பரையாக, தந்தையிடமிருந்து மகனுக்கு வழங்கப் படுகின்றன.
- இந்த அமைப்பு ஆனது உள்ளாட்சி நிர்வாகத்திற்கான பரவலாக்கப்பட்ட கிராம சபை போலச் செயல்படுகிறது.
- இது ஹோ பழங்குடியினரின் அடையாளம், மரபுகள் மற்றும் நில உரிமைகளைப் பாதுகாக்கிறது.
- வேறு சட்ட மாற்றுகள் இல்லாததால் நீதிமன்றங்கள் வில்கின்சனின் விதிகளை நிலை நிறுத்தியுள்ளன.




## பீகார் - பூர்னியாவில் விந்தணு வங்கி வசதி

- பீகார், பூர்னியாவில் உள்ள விந்தணு வங்கி நிலையத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப் பட்டுள்ள பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணு வங்கி வசதியைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்த மையம் ஆனது இராஷ்ட்ரிய கோகுல் திட்டத்தின் கீழ் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தால் நிறுவப்பட்டுள்ளது.
- இது 'இந்தியாவில் தயாரித்தல்' மற்றும் 'தன்னிறைவு பெற்ற இந்தியா' முன்னெடுப்புகளின் கீழ் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 'கௌசோர்ட்' என்ற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- இந்த மையமானது, கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் உள்ள விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் 5 லட்சம் பாலினம் வாரியாகப் பிரிக்கப்பட்ட விந்தணுகளை உற்பத்தி செய்ய முடியும்.
- 84.27 கோடி ரூபாய் மத்திய ஆதரவுடன் அமைக்கப்பட்ட பூர்னியா விந்தணு வங்கி,

இந்தியாவின் மிகப்பெரிய அரசாங்க விந்தணு நிலையங்களில் ஒன்றாகும்.

- ❖ பாலின வாரியாகப் பிரிக்கும் தொழில்நுட்பம் 90% பெண் கன்றுப் பிறப்புகளை உறுதி செய்வதால், இது அதிக வருமானம் மற்றும் குறைந்தச் செலவுகளுடன் பால் துறை சார்ந்த விவசாயிகளுக்கு உதவுகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## INSPIRE விருதுகள் 2025




- ❖ பீகாரில் உள்ள முசாபர்பூர் மாவட்டம் INSPIRE விருது MANAK திட்டத்தில் 7,403 மாணவர் கருத்து சமர்ப்பிப்புகளுடன் தேசிய அளவில் முதலிடத்தைப் பிடித்தது.
- ❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் மேற்கொள்ளப்படும் INSPIRE திட்டம், 6 முதல் 10 ஆம் வகுப்பு மாணவர்களிடையே புதுமைகளை ஊக்குவிக்கிறது.
- ❖ முசாபர்பூர் பெங்களூரு நகரத்தை (7,306 கருத்தாக்கங்கள்) முந்தியது, கர்நாடகாவின் பாகல்கோட்டை (6,826 யோசனைகள்) முதலிடத்தைப் பிடித்தது.
- ❖ பீகாரின் வைஷாலி மாவட்டமும் முதல் பத்து இடங்களில் இடம்பெற்று, 5,805 மாணவர் கருத்தாக்கங்களின் சமர்ப்பிப்புகளுடன் ஆறாவது இடத்தைப் பிடித்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★